பொறுத்தவரையில், எல்லா விண்ணப்பங்களும் அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உடனடியாக அதிகப்படியான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட ஒருசில ஆசிரியர்கள் அந்த விண்ணப்பங்கள் கிடைக்காதோ என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் செய்த தவறுகளின் காரணமாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. அனைத்து விண்ணப்பங்களும் விற்றுத் தீர்ந்திருக்கின்றன. அது முடிந்து இப்போது விண்ணப்பங்களும் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூன்று பாடங்களுக்கான ஆசிரியர்கள், அதாவது Home Science, Computer Science, Bio–Chemistry முடித்த ஆசிரியர்கள் தேர்வு குறித்த கேள்வியைக் கேட்டார்கள். அவர் தருமபுரி மாவட்டத்தில் ஆசிரியர் தாக்கப்பட்டது குறித்துத்தான் கேள்வி எழுப்பியிருக்கிறார். தற்போது மேலும் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பதில் சொல்கிறேன் என்று சொல்லி, இந்த நிலைமை தற்போது சரி செய்யப்பட்டு, சீரான நிலைமையில் இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயின் அளவைக் குறைத்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கக்கூடிய மண்ணெண்ணெயைக் குறைவாக வழங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், கிராமப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளுக்கு மக்கள் மண்ணெண்ணெய் வாங்கச் செல்கின்றபோது, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மண்ணெண்ணெய் குறைவாக வருகின்ற காரணத்தினாலே, நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கின்ற குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. மலைப் பகுதி போன்ற பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தினாலே அவர்களுக்குச் சிரமம் ஏற்படுவது மட்டுமல்ல; மிருகங்களால் கடுமையான தொல்லைகளுக்கும் சிக்கல்களுக்கும்,

நெருக்கடிகளுக்கும் உள்ளாகும் நிலை ஏற்படுகிறது. இதுகுறித்து, நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னேன். வால்பாறை போன்ற மலைப் பகுதிகளில் கூடுதலான மண்ணெண்ணெய் அந்தக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். மேலும், மத்தியத் தொகுப்பிலிருந்து குறைவாக மண்ணெண்ணெய் வழங்கப்படுவதனால் எல்லா இடங்களிலும் ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்படுவதற்கு மத்திய அரசினுடைய நடவடிக்கை காரணமாக இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஒட்டுமொத்த தமிழக மக்கள், தமிழக மக்களுடைய ஏற்றத்தைக் கருத்தில்கொண்டு ஒரு மாற்றத்தைத் தந்து, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதற்குப் பின்னால், மத்திய அரசாங்கம் நம்முடைய தமிழக அரசுக்குச் செய்த மிகப் பெரிய துரோகம், மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டுக்கொண்டிருந்த மண்ணெண்ணெய் அளவைக் குறைத்ததுதான் என்பதனை நான் இந்த நேரத்திலே இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குக் கிடைக்கவேண்டிய மண்ணெண்ணெய் கிடைப்பதிலே ஒரு பதற்றம் இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு, தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்திற்கு மார்ச் 2010 வரை வழங்கிவந்த மாதாந்திர சராசரி மண்ணெண்ணெய், 59,780 கிலோ லிட்டராகும். இந்த ஒதுக்கீட்டினை ஏப்ரல் 2010 முதல் மே 2011 வரை, மாதம் ஒன்றுக்கு 52,806 கிலோ லிட்டராகவும், ஜூன் 2011 முதல் மார்ச் 2012 வரையிலான காலத்தில் 44,572 கிலோ லிட்டராகவும் குறைத்து வழங்கியிருக்கிறது.

மேற்கண்ட பற்றாக்குறையைக் களைவதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 16

அவர்கள், மத்திய அரசுக்கு 1–6–2011 அன்று கடிதம் அனுப்பினார்கள். அந்தக் கடிதத்திற்குப் பின்னாலும் எந்தவிதமான பலனும் அதிலே கிடைக்கவில்லை. இந்தத் தருணத்தில், மத்திய அரசு, மார்ச் 2012 வரை தமிழகத்திற்கு வழங்கிவந்த மண்ணெண்ணெயின் மாதாந்திர ஒதுக்கீட்டு அளவான 44,572 கிலோ லிட்டர் என்ற அளவினை, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல' இந்த ஏப்ரல் மாதம், 39,429 கிலோ லிட்டர் எனக் குறைத்திருக்கிறது. இது, நம்முடைய மாநிலத்தினுடைய மண்ணெண்ணெயின் தேவை இருக்கிறதே, அந்தத் தேவையில் 60.53 சதவீதம் என்பதனை இந்த அவைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மத்திய அரசு, இந்த மாநிலத்திற்கான சராசரி மாதாந்திர மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினைக் குறைத்துவிட்டதால், மண்ணெண்ணெய் பெறத் தகுதியுடைய அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் மாநகராட்சி மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் 10 லிட்டர், இதர நகராட்சி பகுதிகளில் 6 லிட்டர், நகரிய மற்றும் நகர பஞ்சாயத்துகளில் 5 லிட்டர் மற்றும் கிராமப் பகுதிகளில் 3 லிட்டர் என்ற வழங்கல் அளவில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு இன்னொரு முக்கியக் காரணம், மத்திய அரசின் கூட்டணியிலே அங்கம் வகிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தக் கூட்டுச் சதியில் ஈடுபட்டிருக்கிறது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். அதுமட்டுமல்ல; பலமுறை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடிதம் எழுதியிருந்தும் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள் ஒருநாள் கூட இதைப்பற்றிக் கவலைப்படவில்லை என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிலையைக் கருத்தில்கொண்டு குடும்ப அட்டைகளில் எரிவாயு உருளை முத்திரையிடும் பணி ஜூன் 2011 முதல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒன்று மற்றும் இரண்டு எரிவாயு உருளை உள்ள குடும்ப அட்டைகள் அடையாளம் கண்டு முத்திரையிடப்பட்டன. இதன்மூலம் ஜூன் 2011 முதல் பிப்ரவரி 2012 வரை 1,560 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 16] [திரு. இரா. காமராஜ்]

மண்ணெண்ணெய் பெறத் தகுதியுடைய அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கும் வகையில், மாத இறுதியில் நியாய விலை அங்காடிகளுக்கு மண்ணெண்ணெய் பெற வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அங்காடிகளில் மண்ணெண்ணெய் இருப்பு இல்லாதபொழுது அவர்களுக்கு டோக்கன் வழங்கி, அடுத்த மாதம் முன்னுரிமை அளித்து மண்ணெண்ணெய் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கூறிய நடவடிக்கைகளாலும் மற்றும் நியாய விலை அங்காடிகளில் அலுவலர்களை நியமனம் செய்து மண்ணெண்ணெய் விநியோகத்தினைக் கண்காணிப்பதன் வாயிலாகவும் தற்போது மண்ணெண்ணெய் விநியோகம் முறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியில் அதிகமாக மண்ணெண்ணெய் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். மலைப் பகுதியைப் பொறுத்தவரையில், நீலகிரி உள்ளிட்ட மலைப் பகுதிகளில், கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில் 5 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுக்கவேண்டுமென்று நிரந்தரமாக இருந்தாலும், மலைப் பகுதியிலே அவர்களுக்கு இப்போது 10 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, மாவட்டத் தலைநகரமான நீலகிரி பகுதியில் 15 லிட்டரும், நகராட்சி மற்றும் கேத்தி பகுதிகளில் 15 லிட்டரும் வழங்கப்படுகிறது என்பதனையும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன திரு. ரெங்கராஜன்? மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு துரோகம் செய்கின்றது, கூட்டுச் சதி செய்கின்றது என்றெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு எந்தக் காலத்திலும் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை, எந்தக் கூட்டுச் சதியும் நாங்கள் செய்யவில்லை. (குறுக்கீடு) எதற்காகச் சொல்கிறேன் என்று

கேளுங்கள். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையிலும்—இல்லை ஒரு நிமிஷம் பேசிவிடுகிறேன்—எந்த அளவிற்கு எரிவாயு சிலிண்டர்கள் அதிகமாக ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படுகின்றதோ அதற்கேற்றாற்போல் மண்ணெண்ணெய் சப்ளையை மத்திய அரசு குறைத்துக்கொண்டிருக்கிறது. வருடா வருடம் எரிவாயு மானியம், மண்ணெண்ணெய்க்கும் மத்திய அரசு மானியம் கொடுக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டீர்கள், விடுங்கள். இதிலே discussion இல்லை. உறுப்பினர் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அதுசம்பந்தமாக அமைச்சர் reply கொடுத்துவிட்டார். Please sit down. (குறுக்கீடு) Mr. Gopinath, please sit down. (குறுக்கீடு) உங்களுடைய கருத்தும் பதிவு செய்யப்பட்டது, அவருடைய கருத்தும் பதிவு செய்யப்பட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ரெங்கராஜன், மாண்புமிகு அமைச்சர் சொன்ன கருத்தையொட்டி நீங்கள் clarification கேட்டீர்கள், நான் அனுமதித்தேன். உங்களுடைய கருத்தும் பதிவாகிவிட்டது. (குறுக்கீடு) Please, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள், discussion கிடையாது, point–ஐ மட்டும் சொல்லுங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: அதாவது, எரிவாயு சிலிண்டர் அதிகமாக, அதிகமாக மண்ணெண்ணெய் குறைக்கப்படுகிறது. எரிவாயு சிலிண்டர் அதிகரிக்கப்படுகிறதா, இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி; அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இங்கே பல்வேறு கருத்துகளைப் பல நேரங்களில், தினந்தோறும் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளையெல்லாம் நம்முடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதனையும் இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 16] [திரு. இரா. காமராஜ்]

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள்—சாதாரண ஏழையெளிய, பாமர மக்களுக்கு சாலையோர சங்கடத்தில் பாய்விரித்துப் படுத்த பின்னும் உறக்கம் வராத உழைப்பாளி இருக்கிறானே, அந்த உழைப்பாளிக்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்கிற கோரிக்கையை வைக்கிறார்கள். மண்ணெண்ணெய் கிடைக்காததற்குக் காரணம் மத்திய அரசு என்று சொல்கிறோம். மத்திய அரசின் தொகுப்பிலிருந்துதான் மண்ணெண்ணெய் வழங்கவேண்டும், மண்ணெண்ணெய் கொடுக்கவேண்டும். அதை வாங்கித்தான் மாநில அரசு மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டும். அதைக் கொடுக்கவில்லை—அதைக் கேட்டு பெற்றுத் தரவேண்டுமென்று இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியின் கடைசி காலத்திலே, ஏப்ரல் 2011 வரை 52,806 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதனையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(இ) தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மீனவர்கள் குறிப்பாக, இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு இலக்காவது தொடர்கதையாக நடைபெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய இந்திய அரசின் சார்பாக அதிகாரிகளோ, அமைச்சர்களோ இலங்கைக்குச் சென்று திரும்பக்கூடிய வேளையில், மீண்டும் அந்தத் தாக்குதல் நடைபெறுகின்றது. எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமென்றால், கடந்த அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி இந்தியாவினுடைய வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு. ரஞ்ஜன் மெத்தாய், நம்முடைய தமிழக . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அந்தப் பிரச்சினையைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கமாகச் சொல்வார்.